# விதி மரத்துக் கிளிகள்

**- காஞ்சனா ஜெயதிலகர்**

'அன்று அப்படி நினைத்திருக்கக் கூடாது'. பலமுறை இப்படிக் குறைப்பட்டுக் கொண்டாயிற்று. ஏன் அப்படியொரு நினைப்பு? அதுவும் வாழை மரங்கள் கட்டிய மங்கல வாசலில்?

தேவதைகள் ததாஸ்து என்று விட்டனவோ?

நினைப்பில் என்ன... வந்தவர்களின் குணக்கேடுதான் காரணம். ஆனாலும் பலதும் யோசிக்க பூமணிக்கு மூச்சடைக்கும். போன வருடம் அக்காவின் கல்யாண களேபரத்தில் இதே போல மூச்சு முட்டினபோது...

வெளி வாசலில் வந்து நின்றாள் பூமணி. இருபுறமும் நிறுத்திய குலைவாழைகள் அர்த்தமற்றிருந்தன. மங்கல நிகழ்ச்சியின் போது இவை பொருத்தம்.

வறட்டு ஜம்பம், குத்திக் கிழிக்கும் பேச்சு, வேதனை இருக்குமிடத்தை முள் மரங்கள் நட்டுத்தான் அடையாளம் காட்ட வேணும். அப்போ பெரும்பாலான மண் வீடுகளில் முள் மரங்கள்தான் கை விரித்து நிற்கும். இப்படித்தான் நினைத்தாள்.

அக்கா பாவம்.

தான் மணப் பெண்ணாயிருந்தால் -

'ஒண்ணும் சரிப்படலைல்ல? சரி அப்ப கிளம்புங்க' என்று மாப்பிள்ளை வீட்டாரைத் தொடையில் கிள்ளி கிளப்பியிருப்பாள்.

அக்கா அப்பிராணி... அழுது கொண்டிருப்பாளோ? உள்ளறைக்கு ஓடினாள்.

'என்ன பூமி? அப்பா முகம் சரியில்லை. என்ன பேச்சு அங்கே? சொல்லேன். அவர்... அவருக்கு ஒண்ணுமில்லையே?'

'அவருக்குப் பொன்னுக்கு வீங்கி.'

'ஐயோ!'

'மாப்பிள்ளைக்குச் செயின் போடணுமாம். மூணு பவுன். நம்ப பெரியப்பா நகைக் கடைக்குப் போயாச்சு. கழுத்திலே பொன் பட்டதும் நோவு குறைஞ்சு உங்கழுத்திலே தாலி முடிஞ்சிடுவார்!'

மஞ்சள் பூச்சு கன்னங்களில் கண்ணீர் வழிந்தது.

'நா பாரந்தான். உன்னைப் போல் படிச்சு வேலைக்குப் போயிருக்கணும்!'

'யாரும் உன்னை பாரமா நினைக்கலைக்கா. ம்ம்? யோசிச்சா எல்லாப் பொண்ணுகளும் பாரந்தான்!'

'மாசம் 2,500 சம்பாதிக்கற நீ?'



'ம்ம் - என் மூணு மாச சம்பளத்தை பட்ஜெட்டாய் வச்சு அதுக்குள்ளே எங்க கல்யாணத்தை நடத்திக்கறேன்னு வை. அப்போ நான் கெட்டி.'

கரைந்த மை இழுவலிலும் அழகாய் கண் மலர்த்தி கவனித்தாள் மூத்தவள். 'சாத்தியமா அது?'

'இல்லைன்னா நாமெல்லாரும் வெட்டிதான். பெத்தவங்களுக்குச் சுமைதான். சம்பளம் வருதோ இல்லையோ... எல்லாப் பெண்களுக்கும் ஒரே சீர் லிஸ்ட்தான்! நகை தா - ரொக்கம் எத்தனை - பாத்திரம் கட்டிறு எப்படி - சோறு போடு - வீடியோ எடு - எல்லாம் அலட்டல் பேராசை. சக்திக்கு மீறின வேஷம். அவங்களுக்குப் பிறகு பவுசிருந்தால் இங்கே எதுக்கு பிடுங்கல்?'

'என்ன பேசிக்கிட்டாங்க பூமி?'

'நீ இன்னும் ரெண்டு அங்குலம் உசரணுமாம்!'

'எ... என்ன, புரியலை?'

'பொண்ணு குட்டைங்கறாங்க. அப்பா உன்னை திடீர்னு உசத்த முடியுமா? மிரண்டுட்டார். பிறகு சுதாரிச்சு ரெண்டு பவுன் கூடப் போடறோம்னு கெஞ்சின பிறகு மூணு பவுன் மைனர் செயினுக்குப் பேரம் படிஞ்சது.''

'பெண் பார்க்க வந்த சமயம்... கு... குறையா எதுவும் சொல்லலியே?'

'அவங்க பக்க உறவெல்லாம் இப்பத்தான் உன்னைப் பாக்கறாங்க. நம்ப கோமதி மக அரைப் பனை உயரம். உன் மச்சினி 40 பவுனோடு ஸ்டாண்ட் மாதிரி நெடுநெடுன்னு நிப்பாளேன்னு இப்படிப் பேசி, புலம்பி, உசுப்பேத்திட்டாங்க.'

'அவர் என்ன எதுவும் சொல்லலியா?'

'எல்லா பேச்சுக்கும் பலமாத் தலையாட்டினார்.'

'அப்ப எல்லாம் வேஷந்தானில்ல?'

'எதுக்காக?'

'பெண் பார்க்க வந்தன்னைக்கு என்னைப் பார்த்து அப்படிச் சிரித்தார் பூமி. அரை முகந்தான் தெரிஞ்சுது - ஆனா முழு சிரிப்பு. இத்தனை நாள் கனாவெல்லாம் அந்த சிரிப்புத்தான்.'

'ஸாரிக்கா - யோசிக்காம உங்கிட்டே பேசிட்டேன்.'

அப்பா தவித்து குறுகி, வியர்வையில் நனைந்து அலை பாய்ந்ததைக் கண்ட ஆத்திரத்தில் வார்த்தைகளைக் கொட்டியாயிற்று.

'வாக்கா. 'க்யூடெக்ஸ்' போட்டு விடறேன். காலையிலே இதுக்கெல்லாம் நேரமிருக்காது.'

'ம்ப்ச்'

'பேசினவனெல்லாம் மேடையில் உன்னைப் பார்த்து அசர வேண்டாம்? வா' தக்காளி சிவப்பு நகச் சாய பாட்டிலுடன் அக்காவின் நடுங்கும் விரல்களைத் தன மடி மீது எடுத்து வைத்துக் கொண்டதுகூட நினைவில் பசுமையாய்...

மறுநாள் விடியலோடு கவலைகளும் விரிந்தன. வாழ்த்துதலைவிட அதிகம் கேட்டது கேலியும் நொடிப்புகளுந்தான்.

'பொங்கல் களிதான் - முழுங்கி வச்சேன்.'

'காபி தம்ளர் சுண்டு விரல் உசரத்தில்.'

'இங்கே எல்லாம் உசரம் கம்மிதான்' - பெருஞ்சிரிப்பு.

'மரியாதையை விஸ்தீரணமாச் செய்தா சரி' - போலி பெருமூச்சு.

'நகை ஒன்று ரெண்டுதான் புதுசு.'

'சத்திரம் வசதியேயில்லை. பின்கட்டு முழுக்க ச்சீ... நாத்தம்'

'பந்தல், சீரியல் லைட் எதுவும் இல்ல - இப்படியுமா காசு பாப்பாங்க?'

இந்த பேச்சுகளில் கல்யாண மகிழ்வு குலைந்தது. எல்லாம் முடிந்தபின் பணப்பையும் மனமும் வெறுமையில்.

புன்'னகை'யில்லாமல் பெண் புகுந்த வீடு போனாள்.

தாம்பத்தியம் கம்பி மேல் நடப்பதைப் போன்று சிரமமாய் அமைந்து போனது அக்காவிற்கு. இயல்பாய் மூச்சிழுத்து, பேசி, பராக்கு பார்த்து, கால் வீசி என்றில்லாமல் ஒவ்வொரு அடியையும் அதிஜாக்ரதையாய் பதித்து, மூச்சு பேச்சை அடக்கி, அளவாய் விட்டு... அக்கா வெகுவாய் மாறிப்போனாள்.

எட்டு மாச பூரித்த வயிற்றோடு பிள்ளைப் பேறிற்கு அக்கா வந்தபின் வீடெங்கும் ஒரு நிம்மதி. நல்லதிற்குக் காத்திருக்கும் ஒரு சந்தோஷம்.

ஆனால் கண்கள் கருவளையமிட்டு, பாதம் வீங்கி, சோர்வாய் வளைய வந்தவளைக் கண்டபோது இவளுக்கு வயிற்றைப் பிசைந்தது.

பயம்.

தன் வாழ்வும் இப்படித்தானா என்கிற திகில்.

மனசு அன்பால் நிரம்பாமல், வயிற்றை மட்டும் நிரப்பிக் கொண்டு - தானும் இப்படித்தானா... என்ற கலவரம்.

பஸ்ஸில், படுக்கையில், தாயம் விளையாடுகையில், ஆபீஸில் ஃபைல் கோர்த்தபடி, சாம்பாருக்குத் தாளிக்கையில்... சதா யோசனைதான். யோசனையில் அடிக்கடி சோர்வும் இறுதியில் ஒரு தெளிவும் வந்தது. ஆனால் வெறும் நினைவுகள், திட்டங்கள் மட்டுமா வாழ்வை அமைக்கின்றன?

காத்திருக்க வேண்டும். பிறர் பேச்சுக்கெல்லாம் தலையாட்டாத, சுயகௌரவம் - அன்பு - அமைதி - தன்னம்பிக்கை எல்லாம் திரண்ட ஒரு ஆண் தன் கரம் பற்ற வரும் வரை காத்திருக்க வேண்டும்.

அப்படி ஒரு துணை அமையுமா?

புதுமைப் பெண்ணுக்காய் கோஷமிடுபவர்கள், கருணை, கனிவு, கம்பீரம், நேர்மை, நெஞ்சுரமிக்க புதுமை ஆண் வேண்டுமெனவும் கேட்க வேண்டும். இல்லையெனில் ஞானச் செருக்குள்ள பெண்களெல்லாம் ஜோடி சேருவதெப்படி?

இனிய இல்லறம் அமைக்கும் நோக்கம், நேயத்துடன் இவளை அணுகும் துணை வரக் காத்திருப்பாள். வெகு எளிமையாய்த்தான் திருமணம். வாழ்த்துக்களும் வாழைகளுந்தான் அலங்காரம்.

குலைவாழை கூட ஏன்?

அவனும் அவளுமே பூமாலையிட்ட வாழைகளாய் பசுமை பொங்க நிற்க வேணும்.

கற்பனைச் சுக வேளையில்தான் அந்த வரன் வந்தது.

தெளிவு விலகி பதட்டம் பற்றிக் கொண்டது அவளை.

'அக்கா பிரசவம் நடக்கட்டும் - பிறகு பார்க்கலாம்ப்பா.'

'கல்யாணம் பிறகுதான் - முதல்ல பாக்கட்டும் - பேச்செல்லாம்...'

'என்ன பேச்சுப்பா? சீர், ரொக்கம், ஸ்கூட்டர் - இதுதான?'

'எதுவும் எதிர்பார்க்கறதாய் தெரியலைம்மா. அக்கா கலியாணத்தப்போ பையன் உன்னைப் பார்த்தாராம்... விரும்பி வராங்க.'



'நம்ப உறவாம்மா?'

'இல்லடீ - மாப்பிள்ளைக்கு எட்டின சொந்தமாம். கல்யாணத்துக்கு முந்தின நாளே வந்து வாழ்த்திட்டுக் கிளம்பிட்டாராம்.'

வெகு நாட்களுக்குப் பின் அம்மா கண்களில் மலர்ச்சி.

'என்ஜினியரிங் டிப்ளமா படிப்பு, சொந்த கராஜ் - வொர்க்ஷாப் போலேன்னு வை. நிறைஞ்ச சம்பாத்தியம்.'

'முக்கியமா, நல்ல குணங்கறாங்க.'

பதட்டம் குறைந்தாலும் பரவசமாயில்லை.

இரவு படுக்கையில் புரண்டாள்.

யாராயிருக்கும்? முந்தின இரவு பந்தியிலும் பரிமாறினேனே?

வாலிபமாய் எந்த முகம்? ம்ஹூம் - அந்நேரம் அக்காவின் கண்ணீர், அப்பாவின் கெஞ்சல், அம்மாவின் புலம்பல், தன் இயலாமை - இவற்றைத் தவிர வேறேதும் மனதில் பதிவாகவில்லை.

தான் மண்டப வாசலில் நின்று பொருமியது மட்டுமே சிக்கிய ப்ரொஜெக்டர் சிலைடு போல உள்ளே 'சட்சட்' என்று மீண்டும் மீண்டும் முட்ட.... தூங்கிப் போனாள்.

காலையில் வீடு முழுக்க இன்ஷூரன்ஸ் பணம், லோன், புடவை, பாத்திரச் சீட்டு, விருந்தாளிப் பட்டியல் என்று கல்யாண பேச்சாயிருந்தது.

இப்போதைக்கு இந்த பந்தம் வேண்டாமென்று முடிவெடுத்த கணமே வருகிறது பார் சோதனை!

அக்கா போல பெண் பார்க்க வருபவன் வீசும் ஒரு சிரிப்பைப் பிடித்து அதிலேயே கனவுக் கோட்டையைக் கட்டுவது அசட்டுத்தனம். அது உடையும்போது கண்ணைக் கசக்குவது கோழைத்தனம். தொடரும் தாம்பத்தியத்தில் நிலை தடுமாறி நொண்டுவது மகா துன்பம்.

அன்றிரவு மங்கிய நீல ஒளியில் சுவர் பார்த்தபடி கிடந்தாள். 'பூமி, என்னைப் பார்த்துதான மிரண்டுட்ட? இந்தக் கஷ்டமெல்லாம் நமக்கெதுக்குன்ற தயக்கம்.' ஒரு வளை கை மேட்டு வயிற்றிலும் மறு கை கண்ணாடியின் கலகலப்புடன் இவளுக்காய் நீண்டது.

பற்றிக் கொண்டாள்.

'இல்லைக்கா - முதல்ல சின்னகுட்டி பிறக்கட்டும். அத்தான் அதனோட உன்னையும் தூக்கி வச்சு கொண்டாடட்டும். பிறகு பார்ப்போம்.'

'எனக்கு முள்பாதை நடை பழகிடுச்சி பூமி. அப்பப்போ 'உஸ் உஸ்'ன்னு உதறி ஆத்திக்க வேண்டியதுதான். அவருக்கும் காசு, தங்கத்தைவிட உறவும் மனசும் பெரிசுங்கறது புரியும் பாரு. அத்தனைக்கு அன்பு காட்டணும் நான். இப்போ உங்கதை.

தேடி வந்திருக்கிறது நல்ல இடம். முக்கியமா நீள்ற 'லிஸ்ட்' வரலியே - சரின்னுடு.'

'யோசிக்கணுங்க்கா.'

'ம்ப்ச் - குருட்டு யோசனை.'

'ஆமா. பார்த்து பேசின பிறகு யோசிச்சா நல்லது முடியணுமே?'

'நம்ப வீட்டிலேயும் சந்தோஷ சமாச்சாரம் நடக்கணுமில்லையா? இவரு பிறக்கற பிள்ளைக்குத் தேக்கு தொட்டில், வெள்ளி பாத்திரங்க, மூணு பவுனுன்னு தந்த பட்டியல்ல அப்பா அம்மா மிரண்டு கிடக்காங்க. நீயாவது நிம்மதி கொடு.'

'முதல்ல பேசணுங்கா - இதான் நிலைமைன்னு அவரிட்டே தெளிவாக்கிடணும்.'

திடீரென எழுந்த மூத்தவள்,

'பையன் அட்ரஸ் அப்பா டைரிக்குள்ளதான் இருக்குது. மஞ்சள் கலர் தாள். எடுத்துத்தரேன். எழுதிப்போடறியா?'

'மல்லாந்து படுக்காதேன்னு அம்மா வைவாங்க. நீயானா 'சிட்-அப்' மாதிரி வேற எழுந்துக்கற. ஒருக்களிச்சு கை ஊனி எழுந்திரியேன்.'

'நூத்துக்கிழவி'

சத்தமில்லாமல் உருட்டி எடுத்து வந்தாள்.

'மனப்பாடம் பண்ணிட்டேன் - எடுத்த இடத்திலேயே வச்சிருக்கா.'

'சுட்டிகைடீ நீ.'

**வெ**கு நறுக்காக கடிதம் அமைத்து விட்டாள். அவர்கள் தன்னை விரும்பி வந்ததின் காரணம் என்ன? வருங்கால துணையைப் பற்றிய தன் எதிர்பார்ப்புகளின் சூசகக் கோரிக்கைகள், தமக்கையின் கல்யாண கடன் போக, இப்போது பிரசவத்தின் போது கரையவிருக்கும் இருபதினாயிரம் - முதலிய குடும்ப சூழல். அவரது எதிர்பார்ப்புகள் என்ன? இத்தனையையும் பற்றி இருவரும் பேசக் கூடுமா என்ற கேள்வியோடு கடிதத்தை அனுப்பி விட்டாள்.

நான்காம் நாள் அலுவலக வேலையில் மூழ்கியிருந்தபோது பதிலாக அவனே வந்து நின்றான்.

அன்று அவள் ஏப்ரிகாட் சேலைதான் உடுத்தியிருந்தாள். தலைக்கு ஊற்றி தளர்வாய் முடிந்திருந்த கேசம் கலைந்து பறந்தது.

'நாந்தான் ரவீந்திரன் - லெட்டர் வந்ததும் கிளம்பி வந்துட்டேன்.' என்றதும் இவளுக்குக் கால் துவண்டது. மேல் நெற்றியையும் நுனி மூக்கையும் அழுந்தத் துடைத்தாள். எண்ணெய் கசிந்து நிற்கிறதோ? 'நான் வெளியே இருக்கேன். ஆபிஸ் முடிய இன்னும் அரைமணி நேரந்தானே? ஒரு மணி நேரமாகுமா நாம பேச? வீட்டுக்கு வேணா ஃபோன் பண்ணித் தெரியப்படுத்திடுங்க'

'சரி' - சரிபார்த்த, பார்க்காத கணக்கு அத்தனையும் சேர்த்தடித்து அடுக்கினாள். வீட்டுக்குச் சொல்வதா? கடித விஷயம் தெரிய வந்தால் குதிப்பார்கள். அமுக்கிவிட வேண்டியதுதான். சிந்துவிடம் விவரம் சொன்னாள்.

'முகத்தைக் கழுவிக்கோ. கிளம்பு. நல்ல டைப்பாய் தெரியறார் பூமணி.'

தோற்றத்தை சீராக்கி கீழிறங்கியபோது ரோடு பார்த்த படி அமர்ந்திருந்தான். நல்ல உயரம். முன்பின் பார்த்ததாய் நினைவில்லை. கண்ணில், பேச்சில் கண்ணியம்.

'போலாம்.'

ஐஸ்க்ரீம் பார்லரில் பிஸ்தா கப்பும், சிப்ஸும் வாங்கிக் கொண்டு உட்கார்ந்தார்கள்.

'கடிதக் கேள்விகள் நிறைய. முதல்ல, உங்களை விரும்பி கேட்டு வந்த காரணத்துக்கான பதில். உங்க அழகு மட்டுமில்லை. வெளிப்படையாய் பேசினீங்களே - அந்த துணிச்சல். எனக்குப் பிடித்திருந்தது.'

'என்ன பேச்சு? நாம சந்திச்சதேயில்லையே?'

'அம்மா வகையில் உங்க அத்தான் எங்களுக்கு உறவு. கல்யாண சமயம் அம்மா வரமுடியலை. அதனாலதான் நான் வந்தேன். வர்றப்பவே தலைவலி. அங்கே வந்தா செயினைப் போடு இல்லை ஆளை விடுன்னு மாப்பிள்ளை வீடு அடிச்ச லூட்டில வலி அதிகமாயிடுச்சு. பேசாம படுத்திட்டேன். அடுத்த அறையில் நீங்க உங்க அக்காவோடு பேசினது அத்தனையும் கேட்டது..'



'ஓ..! மறுநாளும் உங்களைக் காணலியே?'

'காபியோடயே மறுநாள் கலாட்டா ஆரம்பிச்சுதா... பொறுக்காம கிளம்பிட்டேன். பார்த்தா கஷ்டம். கண்டுக்காம நிக்கவும் இஷ்டமில்லை.'

'ம்ம்.'

'நான் பார்த்த பல குடும்பங்கள்ல அக்காவுக்கு இத்தனை போட்டா, எனக்கு அதிலே இம்மி குறையக் கூடாதுன்னு நிக்கற தங்கைகளைப் பார்த்திருக்கேன். நீங்க என் கல்யாண செலவும் சேர்ந்தால் அக்காளுக்கு திருப்தியா செய்ய முடியுமான்னு கவலைப்பட்டது பிடிச்சிருந்தது. அத்தனையும் வாரி விட்டுட்டா அப்பா அம்மா நிலை என்னன்னு யோசிச்சதுந்தான். அன்னைக்கு கேட்ட உங்க பேச்சுங்கூட வித்தியாசமாய்.... இயல்பாய் ஒரு ஹாஸ்ய உணர்ச்சி. இப்படி ஒரு துணை கிடைச்சா வாழ்க்கை சீராய், சுவாரஸ்யமாயிருக்கும்னு முதல்லேயே ஒரு நோக்கம் விழுந்திருச்சு.''

ஐஸ்க்ரீமின் குளுமை உடலெங்கும் பரவியது.

'இப்படியே போனால் அப்பாம்மா நிலை? எங்க கூட வந்திருக்க சம்மதிக்க மாட்டாங்க...'

'சீர் எதுவும் நான் கேட்கலை. பின்னால... அதாவது நீங்க கல்யாணத்துக்கு சம்மதிச்சா - அவங்களைக் குறையில்லாது பார்த்துக்கலாம். தொழில்ல மேலே வருவேன்ற நம்பிக்கை எனக்கிருக்குது.'

'நீங்களும் வித்தியாசமானவராய்...'

'உங்க முதுகும் பேச்சுந்தான் நான் அறிஞ்சது. அதிலேயே ஆசை... ஆங் முடிவு... அதாவது ஒரு ஐடியா வந்திருச்சுன்னா வித்தியாசமானவன்தானே?'

புன்னகைத்தாள்.

'அஃப் கோர்ஸ்... முதுகே அழகாய் இருந்தது.'

குனிந்து சிரித்தாள்.

தன் வேலை, எதிர்கால திட்டம் பற்றி எல்லாம் பேசினான்.

'வொர்க்ஷாப் பக்கத்திலேயே கூட ஐஞ்சு சென்ட் நிலம் வந்தது. வாங்கி எக்ஸ்ட்ரா டிங்கரிங் ஷெட் ஒண்ணும் போட்டிருக்கேன். இப்போ நல்ல லாபம். அதனால்தான் இந்த ஒரு வருஷ டிலே.'

'சந்தோஷம்'

'பெண் பார்க்க அம்மா, அப்பா, அக்காவெல்லாம் ஆசைப்படறாங்க. நீங்க சரின்னு சொன்னாதான்...'

கேள்வியுடன் பார்த்தான்.

'சரி வாங்க!'

'குட். அதிலே இன்னுமொரு வித்தியாசம். பலகாரமெல்லாம் நாங்களே செய்து எடுத்து வருவோம். அதுதான் டிபனுக்கு.' விழி விரிய நிமிர்ந்தாள்.

'தஞ்சாவூர் பக்கம் அசோகான்னு ஒரு ஸ்வீட் விசேஷம். அம்மா அதைப் பிரமாதமாய் செய்வாங்க. அக்கா முந்திரி பக்கோடா எக்ஸ்பர்ட் - ஆக உங்களுக்கும் சேர்த்து டிபன் கொண்டு வருவோம்.'

'அப்போ காஃபி நாங்க.'

'தாங்க்ஸ், நீங்க சொன்னது போலவே எளிமையான கல்யாணம். உங்க மூணு மாசச் சம்பளம் எட்டாயிரம் போல வருமா? எனக்கு மாச லாபம் ஆறாயிரம்னா பதினெட்டு வரை என் பங்கு. மொத்தம் கால் லட்சம். பிரமாதமாய் செய்திடலாம். புடவை, ட்ரஸ்



Optimized using trial version

சாப்பாடு, மேளம், வீடியோ, மாலை எல்லாம் அதுக்குள்ளதான்.'

'நான் பொண்ணு பார்க்க மட்டுந்தான் சரின்னேன்'

பொய்யை சிரிப்பை மென்றபடி சொன்னாள்.

'சாரி. நீங்க ஒரு வருஷத்துக்கு முன்னே பேசினது கூட எனக்கு மறக்கலைன்னு காட்டற ஆர்வம்.'

'ஆர்வம் பாஸிட்டிவ் விஷயந்தான்.'

இரண்டரை மணி நேரங்கழித்து விடை பெற்றுக் கொண்டார்கள்.

'அப்போ நானே அசோகா, பக்கோடாவோடு உங்க வீட்டுக்கு வர்ர விஷயத்தை எழுதி தெரிவிச்சுடறேன்.'

'பிக்னிக்கா? பூமணியைப் பார்க்க வரோம்னு எழுதுங்க.'

சிரித்தவளை ஆசையாய் ஊடுருவிய அவன் பார்வையில் சிலிர்த்தது.

மறுவாரம் பிள்ளை வீட்டார் வந்திறங்கும் வரை அம்மா ஓயவில்லை.

'கேள்விப்பட்டதுண்டா இப்படி? தங்கமான மனுஷங்க. பகவானே இவளுக்கு அமைஞ்சிடணும்.'

'ஷ் - அம்மா, இதையெல்லாம் வெளியே சொல்லிக்காதே. அத்தான்கிட்ட மூச்சே விடாதே. இன்ஸல்ட்டாய் எடுத்துக்குவார்.'

அத்தான் பிகுவெல்லாம் பண்ணிக் கொண்டு வந்தார்.

அக்கா ஓடி தாங்கி கவனித்தாள்.

'பலகார மணமே காணலையே...'

''ஏதோ... அவங்களே செய்து எடுத்து வராங்களாம். மாப்பிள்ளை பிரியப்பட்டாங்க... அதான்...'

'இதென்ன வேடிக்கை?'

'விபரீதம் தவிர வேறெதுவாய் இருந்தால் என்ன?' மனதுக்குள் நொடித்தாள் பூமணி. ஆனாலும் கவனமாய் உதட்டை இறுக்கி வைத்தாள்.

ரவீந்திரனின் குடும்பமே சிநேகமும் சிரிப்புமாய் நுழைந்து, பத்து நிமிடங்களுக்குள் ஒன்றி விட்டனர். அவர்களது பலகாரங்களைத் தட்டில் பரிமாறி எடுத்து வந்த பூமணி அத்தானிடம் நீட்டியபோது கேலியாய் கேள்வி நீண்டது.

'என்னப்பா ரவீந்திரா - என்ன எல்லாம் இங்க தலைகீழாய் நடக்குது?'

'அதுவும் நல்லதுதானே? - சிரசாசனம்.'

'சதா அப்படியே கிடக்க முடியாதுப்பா. முழி பிதுங்கிடும்.'

'காலையிலே அளவாய் செய்தா ஆரோக்கியம். இங்கேயும் ஆரம்பம் முக்கியமில்லையா? அனுசரணையான இனிமை சுமுக உறவாய் தொடரும்.'

''நீ சாப்பிட்டுப் பாரம்மா பூரணி. பிடிச்சிருக்கா சொல்லு.'' சாமர்த்தியமாய் அத்தை பேச்சு மாற்றினாள்.

அவர்கள் போன பிறகு வீடே வெறிச்சோடிப் போன பிரமை எல்லாருக்கும்.

'நல்ல மனுஷங்க. என்ன பிரியமான பேச்சு..! என்ன சிரிப்பு...! இன்னும் தங்க மாட்டாங்களான்னு ஏக்கமாயிருந்தது.'

'நா கிளம்பறேன்' அத்தான் வெடுக்கென எழுந்தார்.

'இருங்க மாப்பிள்ளை. புலவ் கிளறிட்டேன். பச்சடி, பாயசம் எல்லாம் தயார். டிபன் தயாரிக்கற வேலை இல்ல பாருங்க...''

'லொட லொட'வென்று பேசின தாயை முறைத்தாள் மகள்.



'சமையலுங்கூட அவங்களே இருந்து பண்ணியிருக்கலாம்.' என்ற சுழிப்புடன் அத்தான் கிளம்பி விட்டார்.

எல்லாருக்கும் அன்று சாப்பாடு ஒரு பிடி அதிகம்.

பாத்திரம் கழுவியெடுத்தபோது கேட்டாள்.

'அத்தானுக்கு கோபம் ஏதுமில்லையேக்கா?'

'ஏதோ சொன்னார் - 'என்னை மட்டந்தட்டத்தான் அந்த இளிச்சவாயனை ஸ்வீட், காரம்னு கொண்டு வர சொன்னீங்க. சீர், நகை எதுக்கு - போதுமானது எங்க வீட்டில் இருக்குன்னு அவன் சொன்னது உங்க டயலாக்தானே'ன்னு கொஞ்சம் இடிச்சார்.''

ஆக வேதாளம் மேல் கொம்பிற்குத்தான் ஏறுகிறது

'பாவங்க்கா நீ...'

முள்பாதையில் வெற்று பாதமாய் நடக்க பாதம் மட்டுமல்ல - மனப்பக்குவமும் வேண்டும்.

'மாறுவார். பூமி - ஏதோ இளமை மயக்கம். ரெண்டு பேருக்குமே. இனிதான் தெளிவு படணும். நீ என்ன தெளிவாய் நின்ன? வாழ்வை ஜம்முன்னு அமைச்சுகிட்ட. சந்தோஷமாயிருக்கணும்.'

ஏதோவொரு உணர்வு தொண்டையை அடைக்க வேலைகளை மௌனமாய் முடித்தனர். சீர் தாம்பாளத்தில் வந்திருந்த துளிர் வெற்றிலைகளைச் சுண்ணம் நீவி சுருட்டி மென்றபோது, உதடு சிவக்க பேச்சும் சிரிப்பும் தொடர்ந்தன.

தாய்மை பூரிப்பில் ஒருத்திக்கு - கல்யாணக் காத்திருப்பில் மற்றொருத்திக்கு முகம் முழுக்க அழகு. குவிந்த இதழின் சிவப்பிற்குப் போட்டியாக மையிட்ட விழிகளின் கருமை.

''ஜோடிக் கிளிகளாட்டம் ரெண்டும் எப்படியிருக்குதுங்க. திருஷ்டி சுத்திப் போடணும்னு இது மாதிரி நேரங்கள்லதான் தோணும்.''

அப்பாவிடம் அம்மாவின் கிசுகிசுப்பு.

'சின்ன கிளிக்கு கிளை உல்லாச ஊஞ்சலாய் அமைஞ்சிடுச்சு. மூத்தவ பதமாய் கூடு அமைக்கணும்.'

'விதின்னு ஒன்று உண்டில்லையா? ஆண்டவனே துணை...' படுக்கையைத் தட்டிப் போட்ட அம்மா கரங்குவித்தாள்.

அக்காளும் தங்கையும் மங்கிய நீல விளக்கொளியில் படுத்துக் கொண்டார்கள்.

'விதி? அது மட்டுமில்ல பூமி. மதி முக்கியம். வாழ்க்கையிலே என்ன எதிர்பார்க்கறோம்ங்கற தெளிவு வேணும். புரிஞ்சு அமைச்சுக்கிட்டியே - உன்னைப் பார்க்க பெருமையாயிருக்கு.'

'எனக்குந்தான் எங்கக்காளைப் பார்த்தா பெருமை. கிடைச்ச வாழ்வுல நம்பிக்கை, திருப்தி, அன்பான அனுசரிப்புமாய் போறியே. அந்த குணம் மட்டும் மட்டமா?'

மிளகாயையும் வெல்லத்தையும் ஒருங்கே கடித்து மெல்லும் வினோத அவஸ்தை இருவருக்கும். பாத்திரம் கழுவியதில் சில்லிட்டிருந்த கைகள் நீண்டு ஆதரவாய் மற்றவளுடையதைப் பற்றிக் கொண்டன.

எதிர் சுவரில் அபயம், ஆசிர்வாதம் என்ற பொருளில் படைத்தவனின் உள்ளங்கை மட்டும் வெளேரென்ற துல்லியத்தில்.. அதையே பார்த்தபடி தூங்கிப் போனார்கள்.

**நன்றி: ராஜம்** ○



Optimized using trial version www.balesio.com